இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2015–16

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 07.01.2016

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் குறித்து கோவை மாவட்ட வன அலுவலர், கோவை இணை ஆணையர், வனகால்நடை பராமரிப்பு அலுவலர் மற்றும் துறை பணியாளர்கள் கலந்து கொண்ட பாதுகாப்பு தொடர்பான சீராய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வன விலங்குகள் முகாமிற்குள் நுழைவதை தடுக்கும் பொருட்டு முகாமை சுற்றி அமைக்கப்பட்டுள்ள தகர வேலி, மின் விளக்குகள் அமைத்தல் மற்றும் சோலார் வேலி அமைத்தது குறித்து விவாதிக்கப்பட்டது. கூடுதலாக ஒளிரும் மின் விளக்குகளை அமைக்கவும், கூடுதலாக பவானி ஆற்றின் கரையோரம் கண்காணிப்பு கோபுரம் அமைக்கவும்,சோலார் வேலி அமைக்கப்பட்டுள்ள இடத்தினை கூடுதலாக்கவும் முடிவு செய்யப்பட்டுஅதற்கான பணிகள் முடுக்கி விடப்பட்டது.



